# நுரையீரல் புற்றுநோய் ஸ்கிரீனிங் பற்றி நீங்கள் அறிய வேண்டியது.

## நுரையீரல் புற்றுநோய் என்றால் என்ன?

நுரையீரல் புற்றுநோய் என்பது நுரையீரலில் வருகின்ற புற்றுநோயாகும். நுரையீரலில் அசாதாரண செல்கள் கட்டுப்பாடற்ற முறையில் வளரும்போது இது தொடங்குகிறது. நுரையீரல் புற்றுநோய் மிகவும் பொதுவான புற்றுநோய்களில் ஒன்று, மேலும் இது ஒன்டாரியோவில் புற்றுநோய் காரணமான இறப்புக்கு மிக பொதுவான காரணமாகும். கடந்த காலத்தில், புற்றுநோய் தாமதமாகக் கண்டறியப்பட்டு சிகிச்சையும் பலனளிக்காமல் போனதால் தான், நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான மக்கள் இறந்தனர். நுரையீரல் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து, சிறப்பாக பலனளிக்கும் வகையில் சிகிச்சையளிக்க, மக்களைப் ஸ்கிரீனிங் செய்ய (சோதிக்க) இப்போது ஒரு பயனுள்ள வழி உள்ளது.

### புற்றுநோய் ஸ்கிரீனிங் என்றால் என்ன?

புற்றுநோய் ஸ்கிரீனிங் என்பது புற்றுநோய் வரும் அபாயத்தில் இருந்தும், எந்த அறிகுறிகளும் காண்பிக்காமல், பொதுவாக நன்றாக உணரும் நபர்களுக்கு செய்யப்படும் சோதனையாகும்.

ஒன்டாரியோ நுரையீரல் ஸ்கிரீனிங் திட்டம் (OLSP) என்பது ஒன்டாரியோவின் நுரையீரல் புற்றுநோய் ஸ்கிரீனிங் திட்டமாகும். நுரையீரல் புற்றுநோய் வருவதற்கான அதிக அபாயத்தில் உள்ளவர்கள், இந்த நோய்க்கான ஸ்கிரீனிங்கை வழக்கமாக செய்து கொள்ளுமாறு OLSP ஊக்குவிக்கிறது.

### நுரையீரல் புற்றுநோய்க்கான ஸ்கிரீனிங்கை யார் செய்துகொள்ள வேண்டும்?

நுரையீரல் புற்றுநோய் வரும் அதிக அபாயத்தில் உள்ளவர்களுக்கு நுரையீரல் புற்றுநோய் ஸ்கிரீனிங் பரிந்துரைக்கப்படுகிறது. நுரையீரல் புற்றுநோய் ஸ்கிரீனிங்கிற்காக நீங்கள் தகுதி பெறும் காரணங்கள்:

Ontario Health
Cancer Care Ontario

- நீங்கள் 55 முதல் 80 வயதுடையவர்
- குறைந்தது 20 வருடங்களாக தினம் சிகரெட் புகைத்திருக்கிறீர்கள் - அது தொடர்ச்சியாக 20 வருடங்களாக இருந்திருக்க வேண்டாம், அதாவது நீங்கள் சில காலங்களுக்கு புகைப்பிடிக்காது இருந்திருக்கலாம், மேலும்
- OHIP கவரேஜ் இருக்கவேண்டும்

இந்த அளவுகோல்களை நீங்கள் பூர்த்தி செய்தால், உங்களை ஒரு OLSP இருப்பிடத்தில் பரிந்துரைக்க உங்கள் மருத்துவர் அல்லது செவிலியர் பயிற்சியாளரிடம் பேசுங்கள். அல்லது நீங்கள் ஒரு OLSP இருப்பிடத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்.

நீங்கள் தொடர்பு கொள்ளக்கூடிய OLSP இருப்பிடங்களின் பெயர்களைப் பெற ontariohealth.ca/lungscreeninglocations ஐப் பார்வையிடவும் அல்லது **1.866.662.9233 என்ற** எண்ணை அழைக்கவும்.

## நான் நுரையீரல் புற்றுநோய் ஸ்கிரீனிங்கிற்கு தகுதி பெற்றிருப்பதை எப்படிக் கண்டுபிடிப்பது?

OLSP-க்கு பரிந்துரைக்கப்படும் அனைவரும் ஸ்கிரீனிங்கிற்கு தகுதி பெற மாட்டார்கள்.

நுரையீரல் புற்றுநோய் வருவதற்கான உங்கள் அபாயத்தைப் பற்றி கூடுதலாக அறியவும், உங்கள் உடல்நலம் மற்றும் புகைப்பிடித்தல் வரலாறு பற்றிய கேள்விகளைக் கேட்கவும் ஒரு OLSP இருப்பிடம் உங்களை அழைப்பார்கள். இந்தக் கேள்விகளுக்கு நீங்கள் அளிக்கும் பதில்களை வைத்து, நீங்கள் நுரையீரல் புற்றுநோய் ஸ்கிரீனிங்கிற்கு தகுதி பெற்றீர்களா என்பதை OLSP தளம் உங்களுக்குத் தெரிவிக்கும்.

## நுரையீரல் புற்றுநோய் ஸ்கிரீனிங்கின் போது என்ன நடக்கும்?

நீங்க ஸ்கிரீனிங் பெற தகுதி பெற்றால், சிறிய அளவிலான கதிர்வீச்சைப் பயன்படுத்தும் ஒரு வகை கம்ப்யூட்டட் டோமோகிராபி (CT) ஸ்கேன் உங்களுக்கு வழங்கப்படும். இந்த சோதனை குறைந்த-டோஸ் CT ஸ்கேன் என அழைக்கப்படுகிறது. ஸ்கேன் செய்யும்போது, ஸ்கேனர் எனப்படும் பெரிய டோனட் வடிவ இயந்திரத்தின் வழியாக செல்லும் திறந்த மேசை மீது நீங்கள் படுத்துக் கொள்வீர்கள். உங்கள் நுரையீரலின் விரிவான படங்களை எடுக்க ஸ்கேனர் சிறிய அளவிலான கதிர்வீச்சைப் பயன்படுத்துகிறது. இந்த சோதனை **சில நிமிடங்கள் மட்டுமே எடுக்கும், மற்றும் வலி இருக்காது.** சோதனையின் போது மருந்துகள் அல்லது ஊசிகள் எதுவும் கொடுப்பதில்லை.

ஸ்கிரீனிங் செய்யப்படும்போது உங்களுக்கு ஆதரவு தர மருத்துவமனை ஊழியர்கள் இருப்பார்கள். நீங்கள் ஒரு நண்பரை அல்லது குடும்ப உறுப்பினரை உங்களுடன் அழைத்து வரலாம்.

Ontario Health
Cancer Care Ontario

## நான் எவ்வளவு அடிக்கடி ஸ்கிரீனிங் செய்து கொள்ள வேண்டும்?

நீங்கள் இந்தத் திட்டத்திற்குத் தகுதி பெற்றால், ஒவ்வொரு ஆண்டும் ஸ்கிரீனிங் செய்து கொள்ளுமாறு OLSP பரிந்துரைக்கிறது.

## நுரையீரல் புற்றுநோய் ஸ்கிரீனிங்கிற்கு நான் தகுதி பெறாவிட்டால் என்ன செய்வது?

உங்களுக்கு நுரையீரல் புற்றுநோய் வருவதற்கான அபாயம் காலப்போக்கில் மாறக்கூடும். நீங்கள் ஸ்கிரீனிங்கிற்கு தகுதி பெறவில்லை என்று ஒரு OLSP தளம் உங்களுக்குச் சொன்னால், உங்கள் தகுதியை 3 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சரிபார்க்க வேண்டும்.

பின்வருமாறு இருந்தால் அதற்கு முன்பே மீண்டும் சரிபார்க்க வேண்டும்:

- மீண்டும் புகைப்பிடிக்க தொடங்கினீர்கள் (புகைப்பிடிப்பதை கைவிட்டிருந்தால்)
- உங்களுக்கு நாள்பட்ட நுரையீரல் தடுப்பு நோய் (COPD) இருப்பதாகக் கூறப்பட்டது
- நுரையீரல் புற்றுநோயின் புதிய குடும்ப வரலாறு

## சிகரெட் புகைப்பதை கைவிட நான் எங்கே உதவி பெற முடியும்?

புகைப்பிடித்தலை நிறுத்துவது உங்கள் ஒட்டுமொத்த உடல்நலத்தை மேம்படுத்த நீங்கள் செய்யக்கூடிய சிறப்பான விஷயங்களில் ஒன்றாகும், இது உங்களுக்கு புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புகளையும் குறைக்கும்.

புகைப்பிடித்தலை கைவிடுவது கடினமாக இருக்கலாம், ஆனால் அது சாத்தியம், எவருக்குமே உதவி கிடைத்தால் புகைப்பிடித்தலை கைவிடுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கிறது. தற்போது புகைப்பிடிக்கும் நீங்கள் OLSP இருப்பிடங்களில் ஒன்றிற்கு வந்தால், புகைப்பிடித்தலை கைவிட உதவும் இலவச சேவைகள் உங்களுக்கு வழங்கப்படும்.

புகைப்பிடித்தலை கைவிட உதவ பின்வரும் சேவைகளை நீங்கள் நேரடியாக தொடர்பு கொள்ளலாம்:

- ஹெல்த்811 -ஐ: 811 ஐ டயல் செய்யவும்
- ஸ்மோக்கர்ஸ் ஹெல்ப்லைன்: SmokersHelpline.ca இல்

**நுரையீரல் புற்றுநோய் ஸ்கிரீனிங் பற்றிய கூடுதல் தகவலுக்கு, பார்வையிடவும்:**

**ontariohealth.ca /நுரையீரல்**

Ontario Health
Cancer Care Ontario

அணுகக்கூடிய வடிவத்தில் இந்தத் தகவல் தேவையா? 1-877-280-8538, TTY 1-800-855-0511, info@ontariohealth.ca.